26.08.2025

D.V.C: 1-2023
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 26.08.2025
அ.சா. 1 – பாரதி, வயது. 27/2025, க/பெ. பிரகாஷ்

## எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி–

1–ம் எதிர்மனுதாரர் தொழில் தொடங்க வேண்டி எனது பெற்றோரிடம் பணம் வாங்கி வரச் சொன்னது குறித்து, நான் போலிசில் புகார் கொடுத்துள்ளேனா என்றால், இல்லை. அதுபோல் எந்த சம்பவமும் நடைபெறாத காரணத்தால்தான் நான் புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் தற்போது எங்கு வேலை செய்து வருகிறேன் என்றால், நான் எங்கும் வேலைக்கு செல்வதில்லை. நான் தற்போது வேளச்சேரியில் உள்ள NIA IT Solution என்ற நிறுவனத்தில் HR–ஆக பணிபுரிந்து வருகிறேன் என்றால் சரியல்ல.

23.10.2022 அன்று நான் ஊருக்குச் சென்றபோது எனது திருமணத்தின் போது கொடுக்கப்பட்ட அனைத்து நகைகளையும் எடுத்துச் சென்றுவிட்டேன் என்றால் சரியல்ல. எனக்கு அணிவிக்கப்பட்ட 10 பவுன் நகைகளை மட்டும் தான் எடுத்துச் சென்றேன். 1–ம் எதிர்மனுதாரருக்கு அணிவிக்கப்பட்ட 7 பவுன் நகைகள் எதிர்மனுதாரர் வசம்தான் உள்ளது. நான் கருவுற்றிருந்தபோது ஊருக்குச் சென்றேன் என்றும், கரு கலைந்தது குறித்து 1–ம் எதிர்மனுதாரரிடம் சொல்லவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. அலைபேசி வாயிலாக சொன்னேன். நான் பயணம் செய்த காரணத்தால்தான் கரு கலைந்தது என்று சொன்னால் சரியல்ல. என்னை அடித்து விரட்டிய காரணத்தால்தான் நான் பயணம் செய்தேன். 23.10.2022 அன்று நான் எனது பெற்றோருடன்தான் நான் ஊருக்குச் சென்றேன் என்றும், என்னை யாரும் அடித்து விரட்டவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் ஊருக்குச் சென்ற பிறகு 1–ம் எதிர்மனுதாரர் பலமுறை என்னை அலைபேசி வாயிலாக தொடர்பு கொண்டார் என்றும், நான்தான் அவரிடம் பேசவில்லை என்றும் சொன்னால் சரியல்ல, உடல்நிலை சரியில்லாத காரணத்தால்தான் 1 வாரம் மட்டும் பேசவில்லை. பிறகு பேசினேன்.

நான் எனது எதிர்பார்ப்பிற்கு தகுந்தாற்போல் 1–ம் எதிர்மனுதாரர் நடந்து கொள்ளாத காரணத்தால்தான் அவர் ஆண்மை அற்றவர் என்ற பொய்யான குற்றச்சாட்டை 07.11.2022 அன்று எனது குடும்பத்தார் சொல்லியிருந்தார்கள் என்றால் சரியல்ல. அதனால் 08.11.2022 அன்று எதிர்மனுதாரர் ராஜீவ் காந்தி மருத்துவமனையில் பரிசோதனை செய்து முடிவை எனது அம்மாவிற்கு அனுப்பி வைத்தார் என்றால், எனது தந்தை அலைபேசிக்கு அனுப்பி வைத்தார். ஆனால், அதனை நாங்கள் கோரவில்லை. அதிகப்படியான இழப்பீடு பெற வேண்டும் என்ற நோக்கத்தில் எதிர்மனுதாரருக்கு எதிராக பொய் குற்றச்சாட்டுகள் சுமத்தியுள்ளேன் என்றால் சரியல்ல.

நான் விவாகரத்து கோரி மனு தாக்கல் செய்யவில்லை. என்னுடன் சேர்ந்து வாழ 1–ம் எதிர்மனுதாரர் சென்னையில் வழக்கு தாக்கல் செய்தார் என்றால், நான் இந்த வழக்கை தாக்கல் செய்த காரணத்தால் 1–ம் எதிர்மனுதாரர் சென்னையில் மேற்படி வழக்கு தாக்கல் செய்துள்ளார். திருமணம் சென்னையில் நடைபெற்றது. திருமணச் செலவுகள் அனைத்தும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் செய்யப்பட்டது என்றும், அதற்கான ரசீதுகள் எதிர்மனுதாரர்கள் வசம் உள்ளது என்றும் சொன்னால் சரியல்ல. 3 மற்றும் 4–ம் எதிர்மனுதாரர்கள் சென்னையில் வசிக்கவில்லை என்றும், பெங்களூரில் வசிக்கிறார்கள் என்றும் சொன்னால், வேலைக்காகத் தான் அவர்கள் பெங்களூரில் வசித்து வருகிறார்கள். 3 மற்றும் 4–ம் எதிர்மனுதாரர்கள் என்னை கொடுமைப்படுத்தியதாக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. விடுமுறை, திருவிழா நாட்களில் மற்றும் எனது திருமணத்தின்போது அவர்கள் எங்களுடன்தான் இருந்தார்கள்.

நான் 1–ம் எதிர்மனுதாரருடன் 3 மாதத்திற்கு மேலாக குடும்பம் நடத்தினேன். 1–ம் எதிர்மனுதாரர் என்னுடன் வாழ தயாராக உள்ளார் என்றும், நான்தான் மறுக்கிறேன் என்றும், எதிர்மனுதாரர் குடும்ப வன்முறை செய்யவில்லை என்றும், ஆகவே, நான் மனுவில் கோரிய பரிகாரங்கள் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றும் சொன்னால் சரியல்ல. NIA IT Solution என்ற நிறுவனத்தில் HR–ஆக பணிபுரிந்து மாதம் ரூ.1,50,000/– சம்பளம் பெற்று வருகிறேன் என்றால் சரியல்ல. திருமணத்திற்கு முன்னர்தான் கல்லூரி படிக்கும்போது 3 மாதம் மேற்படி நிறுவனத்தில் தற்காலிகமாக பணிபுரிந்தேன்.

நான் கருவுற்ற பிறகும்கூட 1–ம் எதிர்மனுதாரர் ஆண்மை அற்றவர் என்று பொய்யாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் எனது பெற்றோர் வீட்டிற்கு செல்லும்போது 1–ம் எதிர்மனுதாரரின் 4 ½ பவுன் மோதிரத்தை எடுத்துச் சென்றேனா என்றால் சரியல்ல. எனது வழக்கறிஞர் அறிவிப்பிலும், நான் நஷ்ட ஈடு, நகையை மட்டும்தான் கோரியுள்ளேன் என்றும், சேர்ந்து வாழ கோரவில்லை என்றும் சொன்னால், என்னை கொடுமைப்படுத்தியதற்காக தண்டனை கொடுக்கச் சொல்லிதான் வழக்கு தாக்கல் செய்தேன். மனுவில் கோரிய பரிகாரங்கள் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

**Typed down to my dictation, in my presence and hearing, and under my personal direction and superintendence and admitted by the witness to be correct.**

**(Sd/-……..S. Dineshkumar, 26.08.2025)**
**Vedaranyam(F.A.C.)**